14.6.2023

**ஊடக வெளியீடு**

Ir. பத்மநாதன் K.

தலைமை நிர்வாக அதிகாரி

PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP

**மே 2023 சுங்கை மூடா சம்பவம்: பினாங்கிற்கு "நிறைவுபெற்ற" மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டம் மற்றும் SPRWTS அவசியம்**

- **மத்திய அரசாங்கத்தின் ஆதரவு மற்றும் உதவி இல்லாவிடில், சுங்கை மூடாவில் விபத்து / பிரச்சனை ஏற்படும் போதெல்லாம் பினாங்கில் பெரும் நீர் விநியோகத் தடை ஏற்படும் அபாயம் உள்ளது.**

பினாங்கு, புதன், 14.6.2023: மெங்குவாங் அணை விரிவாக்கத் திட்டத்தை(MDEP) முடிக்கவும், சுங்கை பேராக் மூல நீர் பரிமாற்றத் திட்டத்தை (SPRWTS) செயல்படுத்தவும் பினாங்கு மாநிலத்திற்கு வலுவான மத்திய அரசாங்கத்தின் ஆதரவும் உதவியும் அவசரமாகத் தேவைப்படுகிறது.

பினாங்கில் 453,954 நீர் பயனீட்டாளர்களுக்குச் சிக்கலை ஏற்படுத்திய சமீபத்திய மே 2023 “சுங்கை மூடா சம்பவம்” MDEP மற்றும் SPRWTS திட்டம் அமல்படுத்த வேண்டிய அவசர சூழலைக் கோடிட்டுக் காட்டுகிறது.

பினாங்கு மாநில அரசாங்கத்திடம் இந்தச் சம்பவம் குறித்த முழு அறிக்கையை சமர்ப்பித்ததில், PBAPP பின்வரும் முக்கிய பரிந்துரைகளை முன்னிலைப்படுத்தியுள்ளது:

| | பரிந்துரைகள் | செயல் |
|---|---|---|
| 1. | MDEP:<br>சுங்கை மூடா சம்பந்தப்பட்ட அவசர சூழ்நிலைகளின் போது அணையில் இருந்து ஒரு நாளைக்கு 1,000 மில்லியன் லிட்டர் (MLD) | மத்திய அரசாங்கம் |

| | | |
|---|---|---|
| | வெளியேற்றத்தைச் செயல்படுத்த "நிறைவுச் செய்ய வேண்டிய கூறுகளை" விரைவாக நிறைவுச் செய்ய வேண்டும். | |
| 2 | SPRWTS:<br>பினாங்குக்கு சுங்கை மூடாவைத் தவிர இரண்டாவது பெரிய மூல நீர் ஆதாரத்தைப் பெறுவதற்கு SPRWTS-ஐ செயல்படுத்துவதை விரைவுபடுத்துதல். | மத்திய அரசாங்கம், பினாங்கு மாநில அரசாங்கம் மற்றும் பேராக் மாநில அரசாங்கம் |
| 3. | நீர் விநியோக தற்செயல் 2030 (WCP 2030):<br>பினாங்கிற்கானக் கூடுதல் மூல நீர் ஆதாரங்களாக சுங்கை கிரியன், சுங்கை பிறை மற்றும் EMD ஆகியவற்றைத் செயலடுத்துவதற்கானத் திட்டங்களை விரைவுபடுத்துதல் | PBAPP |
| 4. | சுங்கை மூடா தொடர்பான நீர் விநியோகம் மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பினாங்கு மற்றும் கெடாவில் உள்ள அனைத்து முக்கிய நிறுவனங்களையும் உள்ளடக்கிய "முன் எச்சரிக்கை" அவசர தகவல் தொடர்பு வலையமைப்பை நிறுவுதல். | நீர்ப்பாசனம் மற்றும் வடிக்கால் துறை (JPS), நீர் கட்டுபாடு வாரியம் (BKSA), கெடா நீர் வள வாரியம் (LSANK). |
| 5. | பினாங்கில் சுங்கை மூடா வியூக கண்காணிப்பு மையத்தை (SMSMC) அமைத்து, நதி நீரைக் கண்காணித்தல், 24/7, லஹார் தியாங் உட்கொள்ளலில் நீர் உறிஞ்சுதலைப் பாதிக்கக்கூடிய முரண்பாடுகளில் கவனம் செலுத்துகிறது.<br><br>ஆற்றின் நீர்மட்டத்தைப் பொறுத்தவரை, ஆற்றின் மட்டங்களில் 0.5மீ வீழ்ச்சியானது | PBAPP |

| | | |
|---|---|---|
| | எச்சரிக்கையைத் தூண்டும். நதி நீர் கொந்தளிப்பின் அடிப்படையில், 1,000 NTU-களின் (nephelometric turbidity units) அளவீடும் எச்சரிக்கையைத் தூண்டும். | |

<u>2023,மே சுங்கை மூடா சம்பவத்தின் சுருக்கம்</u>

- 14.5.2023 அன்று காலை 5.00 மணியளவில், PBAPP இன் லஹார் தியாங் ஆலையில் சுங்கை மூடாவின் நீர்மட்டம் 1.0 மீட்டருக்கும் கீழே குறைந்தது. சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலைக்கு (WTP) பம்ப் செய்வதற்கு சுங்கை மூடாவிலிருந்து PBAPP நீரை எடுக்க முடியவில்லை.

- கெடாவின் (பினாங்கில் அல்ல) தடுப்பணையில் உள்ள தானியங்கி சென்சார் பிரச்சனையால் விபத்து ஏற்பட்டது. நீர்ப்பாசனம் மற்றும் வடிக்கால் துறையின் (DID) சுங்கை மூடா வாரிய நிர்வாகம்(PLSM), மூலம் இந்த தடுப்பணை நிர்வகிக்கப்படுகிறது. அக்கதவு 11 மணி நேரமாக "திறக்கப்பட்டது" என்று கூறப்படுகிறது. இதனால் பெரிய அளவிலான நீர் மலாக்கா நீரிணையில் கலந்து விட்டது.

- PBAPP உடனடியாக அதன் அவசரகால செயல் திட்டத்தை (ERP) செயல்படுத்தியது. இதில் விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணையிலிருந்து (EMD) இருந்து எடுக்கப்படும் மூல நீரும் அடங்கும். இருப்பினும், அணையில் இருந்து எடுக்கப்பட்ட அளவு 300 MLD ஆக வரையறுக்கப்பட்டுள்ளது, மார்ச் 2023 இல் சுங்கை மூடாவிலிருந்து சுங்கை டுவா WTP-க்கு 1,254 MLD (24%) பம்ப் செய்யப்பட்டது.

- சுங்கை டுவா WTPக்கு சுத்திகரிப்புக்காக அனுப்பப்படும் மூல நீரின் அளவு 76% குறைவாக இருந்ததால், செபராங் பிறை மற்றும் பினாங்கு தீவில் உள்ள 453,954 பினாங்கு நீர் பயனீட்டாளருக்கு நீர் விநியோகம் பாதிக்கப்பட்டது.

- PBAPP சுமார் 36 மணிநேரத்தில் 90% நீர் விநியோகத்தை மீட்டெடுக்க முடிந்தது (15.5.2023 அன்று காலை 9.30 மணி) மற்றும் சுமார் 64 மணி

நேரத்தில் (16.5.2023 இரவு 9.00 மணிக்கு) 99% நீர் விநியோகம் இயல்புநிலைக்குத் திரும்பியது.

<u>ஆபத்து</u>

மற்றொரு "சுங்கை மூடா சம்பவம்" ஏற்பட்டால் பினாங்கில் உள்ள 453,954 பயனீட்டாளர்கள் (பாயான் லெப்பாஸ் திறந்த வர்த்தக மண்டலம் மற்றும் புக்கிட் மின்யாக் தொழிலியல் பகுதியில் செயல்படும் பன்னாட்டு உற்பத்தி நிறுவனங்கள் உட்பட) நீர் விநியோகத்தில் தடை ஏற்படும் .

பினாங்கு மாநில அரசாங்கமும் PBAPPவும் நேரடியாகவும் முழுமையாகவும் இம்மாதிரியான சம்பவம் மீண்டும் நிகழாமல் தவிர்க்கவும் அல்லது அதன் அபாயத்தைக் குறைக்கவும் முடியாது, ஏனெனில்:

- பினாங்கில் ஒரே ஒரு பிரதான மூல நீர் ஆதாரம் மட்டுமே உள்ளது: சுங்கை மூடா. செபராங் பிறை, லஹார் தியாங்கில் உள்ள ஆற்றில் இருந்து PBAPP மூல நீரைப் பெறுகிறது.

- சுங்கை மூடாவின் ஒரு பகுதி கெடா எல்லைக்குள் உள்ளது. இந்த ஆற்றின் நீர்ப் பிடிப்பு பகுதி (உலு மூடா வன வளாகம்) பினாங்கு மாநில அரசு மற்றும் PBAPP அதிகார வரம்பிற்கு அடுத்து கெடாவில் அமைந்துள்ளது.

- பினாங்குக்கான மூல நீர் வளம் மேம்பாடு அடைவது மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாகும். நீர் விநியோக சேவைகள், நீர் விநியோகத் தொழிலியல் சட்டம் 2006 (சட்டம் 655) மற்றும் SPAN சட்டம் 2006 (சட்டம் 654) ஆகியவற்றின் கீழ் மத்திய அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

- SPRWTS போன்ற மாநிலங்களுக்கு இடையிலான மூல நீர் பரிமாற்றத் திட்டத்தை எளிதாக்குவதற்கு மத்திய அரசாங்கத்திடம் மட்டுமே நிதி, ஆட்சி அதிகாரம் மற்றும் வளங்கள் உள்ளன.

PBA
Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

• MDEP என்பது ரிம1.2 பில்லியன் மத்திய அரசாங்கத்தின் மானியத்தால் நிதியளிக்கப்பட்ட மத்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட முழுமையற்ற கூட்டரசு திட்டமாகும். EMD இருந்து தற்போதுள்ள 300 MLD திறன் போதுமானதாக இல்லை என்பது தெளிவாகக் காட்டுகிறது. பினாங்குக்கு சுங்கை மூடாவில் சிக்கல் ஏற்படும் போதெல்லாம் 1,000 MLD "மாற்றுவழி” (back-up) தேவைப்படுகிறது.

MDEP மற்றும் SPRWTS திட்டம் செயல்பாடுக் காணும் வரை, சுங்கை மூடாவில் குறிப்பிட்ட விபத்து ஏற்படும் போதெல்லாம் பினாங்கு வாழ் பாதிக்கப்படுவார்கள். எனவே, பினாங்கு மக்கள் மற்றும் வணிகங்கள் சார்பாக, PBAPP, உயர் நீர் அபாயங்களை விரைவில் தணிக்க தயவுசெய்து தலையிடுமாறு மத்திய அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கிறது.

நன்றி

---

எழுத்தாக்கம் :Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
காா்ப்பரேட் தகவல் பிரிவு
மின்னஞ்சல் :syarifah@pba.com.my